# திராவிடத்தால் வாழ்கிறோம்

1254

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

118

''கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

## பொய் மூட்டைகளை அவிழ்த்து விடும் த.வெ.க.!

**தி.மு.க. ஆட்சியில் லஞ்சம் கேட்டதாகவும், த.வெ.க. ஆட்சியில் லஞ்சம்-ஊழல் அறவே இல்லை என்றும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சங்கத்தினர், தலைமைச் செயலக வளாகத்திலேயே பேட்டி கொடுக்கிறார்களே?**

பொய்யைப் பேசியே ஆட்சிக்கு வந்த கட்சி, இன்னமும் அதே பொய்யைப் பேசி மக்களை நம்பவைக்கப் பார்க்கிறது. கரூர் கூட்ட நெரிசலில் 41 உயிர்கள் பலியானதற்கு எந்த வித குற்ற உணர்ச்சியும் இல்லாமல், தன்னைப் பார்க்க வந்த மக்கள்தானே பலியாகியிருக்கிறார்கள் என்ற இரக்க உணர்ச்சியும் இல்லாமல், உடனடியாக ஓட்டமெடுத்த விஜய், 41 பேர் மரணத்தை, தி.மு.க. மீது பழிபோடும் செயலாகத் தனது 'விர்ச்சுவல் வாரியர்ஸ்' மூலம் மாற்ற நினைத்தவர்தானே! அதே பாணியைத்தான் ஆட்சிக்கு வந்த பிறகும் கடைப்பிடிக்கிறது த.வெ.க. அரசு.

கரூர் பரப்புரையில், 'பாட்டிலுக்கு 10 ரூபாய்' என்று பாட்டுப் பாடியவர் விஜய். அவரது ஆட்சியில், டாஸ்மாக் கடைகளில் பாட்டிலுக்கு 20 ரூபாய் வசூலிப்பதை த.வெ.க. பாணியிலேயே ரீல்ஸ்களாக வெளியிட்டுவருகிறார்கள் பொதுமக்கள். தலைமைச் செயலகத்தில் தி.மு.க. அரசுக்கு எதிரான சங்கங்களைப் பிடித்து, பேட்டி கொடுக்கவைப்பது இருக்கட்டும், த.வெ.க. ஆட்சியின் லஞ்ச-ஊழல் பற்றி அந்தக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகியே வெளிப்படையாகக் குற்றம் சாட்டியிருக்கிறாரே!

விழுப்புரத்தைச் சேர்ந்தவரான த.வெ.க. வழக்கறிஞர் அணியின் இணைச் செயலாளர் ஞானசவுந்தரி, தன்னுடைய குற்றச்சாட்டில் அமைச்சரும் த.வெ.க. பொதுச்செயலாளருமான என்.ஆனந்த் பரிந்துரையில் த.வெ.க. மாவட்டச் செயலாளர் மோகன்ராஜும், மாவட்ட ஆட்சியரும் கூட்டு சேர்ந்து, அரசு வழக்கறிஞர்கள் நியமனத்துக்கு தலா 30 இலட்ச ரூபாய் வரை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டு, வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வழக்கறிஞர்களை அரசு வழக்கறிஞர்களாக நியமித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு முழுவதும் அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் 80 கோடி ரூபாய் இலஞ்சப் பணமாகக் கைமாறியிருக்கிறதாம்.

நாகர்கோவிலில் மாவட்டக் கண்காணிப் பாளர் அலுவலகத்தில், வெற்றிச்செல்வி என்பவர் அளித்துள்ள புகாரில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் மனைவி மரியலீலா, அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி, 11 இலட்ச ரூபாய் மோசடி செய்ததாகக் குற்றம்சாட்டியுள்ளார். மற்றொரு அமைச்சர் நிர்மல்குமார் மீது உசிலம்பட்டி வட்டாரத்தில் நில மோசடி புகார் எழுந்துள்ளது. தூத்துக்குடி மாவட்டம், ஏரல் பேரூராட்சியில் நடைபெறும் வாரச் சந்தையில், வாரந்தோறும் ஒரு இலட்ச ரூபாய் மாமூல் கேட்டு, ஸ்ரீவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ.சரவணன் மிரட்டுவதாக, வாரச் சந்தையில் வணிகம் செய்யும் வியாபாரிகள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருப்பதுடன், இந்த மாமூலுக்கு வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், அரசு அதிகாரிகள் மூலமாக வாரச் சந்தையையே மூடவைத்துவிட்டார் எம்.எல்.ஏ. என்றும் தெரிவித்துள்ளனர். வியாபாரிகளின் தொடர் போராட்டத்தினால் வாரச் சந்தையை மூடும் முடிவை, அரசுத் தரப்பு திரும்பப் பெற்றுள்ளது.

செங்கல் சூளை உள்ள இடங்களில் மாமூல் வசூல், அரசு கட்டித்தரும் குடியிருப்புகளில் குடியேறும் ஏழை மக்களிடம் அதிரடி வசூல் எனத் தமிழ்நாடு முழுவதும் த.வெ.க.வின் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் தொடங்கி, வட்டச் செயலாளர் வரை இலஞ்சப்பணத்தில் மஞ்சள் குளிக்கிறார்கள்.

...வினா தொடரும்.

## புறவாசல் வழியாகக் கல்வியைச் சிதைக்கும் த.வெ.க.!

தமிழ்நாட்டுக் கல்விக் கட்டமைப்பின்மீது, நீண்டகாலமாகவே குறிவைத்து, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், தமிழ்நாட்டின் கல்வித் தரத்தைத் தாழ்த்தும் வகையில் பேசிவருகின்றனர், புதிதாகப் பொறுப்பேற்ற த.வெ.க. அமைச்சர்கள். இது தொடர்பாக, ஊடகவியலாளர் அருள் எழிலன் தனது முகநூல் பதிவில், 'நமது கல்விக் கட்டமைப்பை, பா.ஜ.க.வின் காலில் வைக்கிறார், விஜய்' என விமர்சனம் செய்துள்ளார். அவரது பதிவில்...

"அதிகபட்சம், நம் தரப்பில் இருந்து சில அறிக்கைகளோடு முடிந்துபோகும் விஷயமல்ல இது. தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா, அரசுப் பள்ளிகளுக்குள் புகுந்து மாணவர்களை இழிவாகவும், அரசுப் பள்ளிக் கட்டமைப்பை இழிவாகவும் பேசி வரும் நிலையில், நேற்று பேசிய உயர்கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன், 'தமிழ்நாட்டில் உயர்கல்வி தரமாக இல்லை' என்று பேசியுள்ளார்.

காங்கிரஸ் ஆளும் மாநிலங்களைவிட, தமிழ்நாட்டுப் பள்ளிக் கல்வியும், உயர்கல்வியும் மிகமிக மேம்பட்டவை. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களைவிட, தமிழ்நாட்டுக் கல்விப்புலம்தான் வளர்ச்சியடைந்த ஒன்று. இதைப் படிப்படியாக ஒன்றிய அரசிடம் ஒப்படைக்கும் வேலையைச் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் 15 பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர் இல்லாமல் செயல்படும் செய்தியை முன்னுக்குத் தள்ளும் இவர்கள், நாம் எப்படியான சமூகக் கட்டமைப்பைக் கிராமப்புறங்களில் இருந்து உருவாக்கியிருக்கிறோம் என்பதை மறைக்கிறார்கள்.

இங்கு உடலுழைப்பு சார்ந்த பணிகளுக்கு வட மாநிலத்தவர்கள் வந்து குவியும்போதும் ஐ.டி. துறை உள்ளிட்ட வெவ்வேறு சேவைத் துறைகளில் பணியாற்ற தமிழ்நாட்டவர்களே குக் கிராமங்களில் இருந்து வரும் அளவுக்கு நம் கட்டமைப்பு மிக மிக மேம்பட்டிருக்கிறது. இது, 59 ஆண்டுக்கால திராவிட ஆட்சிகளின் சாதனை அல்லாமல் வேறு என்ன? இதே நிலையை உ.பி., ம.பி., குஜராத், ஏன் காங்கிரஸ் ஆளும் ஆந்திராவில் காட்ட முடியுமா? இல்லை. எனவே, நம் வலிமையைக் குறைக்க கல்விக் கட்டமைப்பை, ஒன்றிய அரசிடம் கொடுக்க இவர்கள் நினைக்கிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். பா.ஜ.க. புறவாசல் வழியாக நுழைவது இப்படித்தான் என்பதை, தமிழ்நாட்டின் ஜனநாயக சக்திகள் உணரத் தொடங்கியுள்ளன.

## ஃப்ளாஷ்பேக்

ஏ.டி.மணி

### தலைவர் நடத்திவைத்த மணவிழா!

1984-ஆம் ஆண்டு, பிப்ரவரி 9-ஆம் தேதி எனது மணவிழா. அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இளைஞர் அணி தொடங்கிய ஆரம்ப காலகட்டம் என்பதால், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொள்ள, எனது மணவிழா, இளைஞர் அணி விழா போலவே மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**- ஏ.டி.மணி, தண்டையார்பேட்டை, முன்னாள் பகுதிச் செயலாளர், ஆர்.கே.நகர் மேற்கு, சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்லூருக

### நீதிமன்ற வளாகம்!

1953-ஆம் ஆண்டு ஜூலை, மும்முனைப் போராட்டத்திற்கு, திட்டமிட்ட நாளுக்கு முன்னரே கைது செய்யப்பட்டனர். பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட தலைவர்கள், 10 நாட்கள் சிறைவைக்கப்பட்டு, வழக்குப் பதிவுசெய்து, ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி விசாரணைக் காக நீதிமன்றம் அழைத்துவரப்பட்டனர். சென்னை மாகாண நீதிபதி முன் விசாரணை முடிந்து, செப்டம்பர் மாதம் முதல் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது. அன்று, நீதிமன்ற வளாகம் முழுவதும் கழகத்தினரால் நிரம்பி இருந்தது. 'கண்ணியமும் கட்டுப்பாடும் கழகத்தின் கண்கள்' என நீதிமன்ற வளாகப் பகுதி எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900